# சுவிஸ் தமிழ்க் கத்தோலிக்க ஆன்மிகப் பணியகம் நடாத்தும் மறை அறிவுப் போட்டிகள் - 2025

## பிரிவு 9 (2011 ம் ஆண்டில் பிறந்தவர்கள் வயது 14)

## விவிலிய வினாவிடைப் போட்டி (சரியான விடையைத் தெரிவு செய்தல், சரியான விடைகளை எழுதுதல்)

1. மூவொரு கடவுள் யார்? பிதா, சுதன். பரிசுத்தஆவி
2. மூவொரு கடவுளில் பிதா என்பர் யார்? இறைவன்
3. மூவொரு கடவுளில சுதன் என்பர் யார்? இயேசு
4. இயேசுவின் பெற்றோர் யாவர்? தந்தை – யோசேப்பு தாய் - மரியாள
5. அன்னை மரியாளுக்கு மங்கள வார்த்தை சொன்னது யார்? கபிரியேல் என்னும் வானதூதர்
6. கபிரியேல் என்னும் வானதூதர் கூறிய வார்த்தை யாது? அருள் மிகப் பெற்றவரே வாழ்க! ஆண்டவர் உம்மோடு இருக்கின்றார்
7. வானதூதர் கூறிய வார்த்தையை கேட்டு அன்னை மரியாள் கூறிய பதில் யாது? நான் ஆண்டவரின் அடிமை, உம் செற்படியே எனக்கு நிகழட்டும்
8. எம்மை பாதுகாக்கும் காவல் தூதர் யார்? மிக்கேல் தேவ தூதர்
9. மரியாள் இயேசுவைக் கருத்தரித்திருப்பதை அறிவித்த வானதூதர் யார்? கபிரியேல் தூதர்
10. இயேசு பிறந்த காலத்தில் இருந்த உரோமைய அரசன் யார்? அகுஸ்து சீசர்
11. இயேசுவின் கோத்திரம் எது? தாவீது
12. நற்செய்தி நூல்கள் எத்தனை? அவை எவை? 4, மத்தேயு, மாற்கு, லூக்கா, யோவான்
13. நான்கு நற்செய்திகளுக்குரிய அடையாளங்கள் எவை?
14. மத்தேயு – மனித முகம் 2. மாற்கு – சிங்கம்3. லூக்கா – எருது 4. யோவான் - கழுகு
15. இயேசு தோற்றம்மாறிய போது இயேசுவோடு இருந்த சீடர்கள் யார்? பேதுரு, யோவான், யாக்கோப்பு
16. இயேசு தோற்றம்மாறிய போது இயேசுவோடு உரையாடியவர்கள் யார்? எலியா, மோயிசன்
17. இயேசு உருமாறிய போது கேட்ட குரல் யாது? என் அன்பார்ந்த மைந்தர் இவரே , நான் தெரிந்து கொண்டவர் இவரே, இவருக்கு செவிசாயுங்கள்.
18. இயேசு திருமுழுக்கு பெற்ற போது வானில் கேட்ட குரல் யாது? என் அன்பார்ந்த மகன் நீயே, உன் பொருட்டு நான் பூரிப்படைகின்றேன்.
19. இயேசு யாரிடம் திருமுழுக்கு பெற்றார்? திருமுழுக்கு யோவானிடம்
20. இயேசுவைக் காட்டிக் கொடுத்த திருத்தூதர் யார்? யூதாஸ் கரியோத்து
21. செக்கரியா, எலிசபேததின் மகன் யார்? திருமுழுக்கு யோவான்
22. திருமுழுக்கு யோவான் உண்ட உணவு யாது? வெட்டுக்கிளி, காட்டுத்தேன்
23. இறைவன் பத்துக்கட்டளையை யாரிடம் கொடுத்தார்? மோயீசனிடம்
24. இறைவனை நாம் அப்பா தந்தை என அழைக்கும் உரிமையை பெற உதவும் அருளடையாளம் எது? திருமுழுக்கு
25. பரிசுத்த திருச்சபை ஒவ்வொரு வருடமும் தேவ அன்னைக்கு எடுக்கும் விழாக்கள் எவை? தூய மரியாள் இறைவனின் அன்னை, தூய மரியாவின் விண்ணேற்பு, தூய மரியாவின் அமல உற்பவம்
26. மோயீசன் பத்துக்கட்டளை பெறுவதற்கு முன்னர் எத்தனை நாள் செபித்தார்? 40 நாள்
27. ஏழாவது கட்டளை மூலம் எமக்கு தரப்படும் செய்தி யாது? களவு எடுக்கக் கூடாது
28. எட்டாவது கட்டளை மூலம் எமக்கு தரப்படும் செய்தி யாது? உண்மையை மட்டுமே பேச வேண்டும்

29. இயேசுவின் பிறப்பு முதலில் யாருக்கு அறிவக்கப்பட்டது? இடையர்களுக்கு
30. வானதூதர் இடையர்களுக்கு கூறியது என்ன? இன்று ஆண்டவாரகிய மெசியா உங்களுக்காக தாவீன் கோத்திரத்தில் பிறந்துள்ளார்
31. இயேசு பிறந்ததை தெரியப்படுத்த வானத்தில் தோன்றிய அடையாளம் எது? விண்மீன்
32. இயேசு பிறந்த காலத்தில் யூதாவை ஆண்ட சிற்றரசன் அரசன் யார்? எரோது
33. இயேசுவின் பிறப்பு வேறு யாருக்கு அறிவிக்கப்பட்டது? ஞானிகளுக்கு
34. இயேசுவைக் காண ஞானிகள் எடுத்து சென்ற பொருட்கள் எவை? பொன், சாம்பிராணி, வேள்ளைப் போளம்
35. இயேசுவை கொல்லத் தேடிய அரசன் யார்? ஏரோது அரசன்
36. இயேசுவுக்கு விருத்தசேதனம் எத்தனையாம் நாள் கொடுக்கப்பட்டது? 8ம் நாள்
37. இயேசுவை கோயிலில் காணிக்கை கொடுத்த போது பலியாக கொடுத்த பொருட்கள் எவை? ஒரு சோடி மாடப்புறா
38. இயேசு கைது செய்யப்பட்டது யாரால்? யூதர்களால்.
39. இயேசு கைது செய்யப்பட்டு எங்கு அழைத்துச் செல்லப்பட்டார்? தலைமைக் குருவின் வீட்டிற்கு.
40. இயேசு கைது செய்யப்பட்டு தலைமைக் குருவின் வீட்டிற்கு அழைத்துச் செல்லப்பட்டபோது அவரைப் பின்தொடர்ந்த திருத்தூதர் யார்? பேதுரு.
41. பேதுரு இயேசுவை தெரியாது என்று எத்தனை தடவைகள் மறுதலித்தார்? 3 முறை.
42. இயேசுவை சூழ்ச்சியாக பிடித்து கொலை செய்ய ஆலோசித்தவர்கள் யாவர்? கயபா, தலைமைக்குருக்கள், மக்களின் மூப்பர்கள்
43. இயேசுவைக் காட்டிக்கொடுப்பதற்காக யூதாசு பெற்ற கூலி என்ன? 30 வெள்ளிக்காசுகள்
44. இயேசுவிற்கு பதிலாக விடுதலை செய்யப்பட்ட சிறைக் கைதி யார்? பரபாஸ்.
45. இயேசுவிற்கு சிலுவை மரணத் தீர்ப்பைத் தந்தது யார்? ஆளுநர் பிலாத்து.
46. இயேசுவுடன் சிலுவையில் அறையப்பட்டவர்கள் யாவர்? இரு கள்வர்கள்.
47. நீர் இன்று என்னோடு பேரின்ப வீட்டில் இருப்பீர் என்று இயேசு யாருக்கு கூறினார்? சிலுவையில் அறையப்பட்ட நல்ல கள்வனுக்கு
48. இயேசு எரிக்கோவுக்குப் போகும் வழியில் காட்டு அத்திமரத்தில் ஏறி இயேசுவைப் பார்க்க விரும்பிய குள்ள மனிதரின் பெயர் என்ன்? சக்கேயு
49. மணமகனை எதிர்கொண்ட 10 மணமகளின் தோழியர் உவமை கூறும் நீதி என்ன? எப்போதும் விழிப்பாயிருங்கள்
50. திருக்குடும்ப அங்கத்தவர்கள் யாவர்? யோசேப்பு, மரியாள், இயேசு
51. அருளடையாளங்கள் எத்தனை? 7 திருமுழுக்கு, ஒப்புரவு நற்கருணை, உறுதிப்பூசுதல், திருமணம், குருத்துவம், நேயிற்பூசுதல்
52. அருளடையாளங்களை எத்தனை வகையாக பிரிக்கலாம்? அவை எவை? 3 புகுமுக அருளடையாளங்கள், குணமளிக்கும் அருளடையாளங்கள், பணிவாழ்வின் அருளடையாளங்கள்
53. புகுமுக அடையாளங்கள் எவை? திருமுழுக்கு, உறுதிப்பூசுதல், நற்கருணை,
54. குணமளிக்கும் அருளடையாளங்கள் எவை? ஓப்புரவு, நோயிற் பூசுதல்
55. பணிவாழ்வின் அருளடையாளங்கள் எவை? குருத்துவம், திருமணம்
56. ஒரு முறை மட்டும் பெற்றுக் கொள்ளக் கூடிய அருளடையாளங்கள் எவை? திருமுழுக்கு, உறுதிப்பூசுதல், குருத்துவம்
57. திருச்சபையின் முதல் மறைசாட்சி யார்? புனித ஸ்தேவான்
58. இயேசு நியமித்த 12 திருத்தூதர்கள் யாவர்? பேதுரு, செபுதேயுவின் மகன் யாக்கோவு, அவர் சகோதரர் யோவான், அந்திரேயா, பிலிப்பு, பார்த்தலமேயு, மத்தேயு, தோமா, அல்பேயுவின் மகன் யாக்கோபு, ததேயு, தீவிரவாதியாய் இருந்த சீமோன், இயேசுவைக் காட்டிக் கொடுத்த யூதாஸ் ஸ்கரியோத்து
59. படகிலே வலைகளைப் பழுது பார்த்துக்கொண்டிருப்பதைக் கண்ட இயேசு யாரை அழைத்தார்? யாக்கோபு, யோவான்

60. திமிர் வாதக்காரனை எத்தனை பேர் சுமந்து கொண்டு வந்தார்கள்? 4 பேர்
61. நீ எழுந்து உன்னுடைய படுக்கையை எடுத்துக்கொண்டு உன் வீட்டிற்குப் போ என்று இயேசு யாரிடம் கூறினார்? திமிர்வாதக்காரனிடம்
62. உலகிலேயே அதிகமாக விற்பனையான நூல் எது? விவிலியம்
63. விலிலியத்தில் எத்தனை நூல்கள் உண்டு? 73
64. பழைய ஏற்பாட்டு நூல்கள் எத்தனை? 46
65. புதிய ஏற்பாட்டு நூல்கள் எத்தனை? 27
66. பைபிளில் மிகப் பெரிய அதிகாரம்? திருப்பாடல் 119
67. மிகச் சிறிய அதிகாரம்? திருப்பாடல் 117
68. பெரிய இறைவாக்கினர்கள் யாவர்? எசாயா, எரேமியா, எசேக்கியேல்
69. சிறிய இறைவாக்கினர்கள் யாவர்? பாரூக், நாகூம், யோவேல்
70. மன்னார் மறைமாவட்டத்தின் புதிய ஆயரின் பெயர் என்ன? ஆயர் அந்தோனிப்பிள்ளை ஞானப்பிரகாசம்

## பத்துக்கட்டளைகளும் எவை? 10 கட்டளைகளை வரிசைக்கிரகமாக மனம் பாடம் செய்தல் வேண்டும்

1. நானே உன் கடவுளாகிய ஆண்டவர், என்னைத் தவிர வேறு தெய்வங்கள் உனக்கிருத்தல் ஆகாது. (விடுதலைப் பயணம் 20:2-3)
2. உன் கடவுளாகிய ஆண்டவரின் பெயரை வீணாகப் பயன்படுத்தாதே. (விடுதலைப் பயணம் 20:7)
3. ஓய்வு நாளை தூயதாக கடைப்பிடிப்பதில் கருத்தாயிரு (விடுதலைப் பயணம் 20:8)
4. உன் கடவுளாகிய ஆண்டவர் உனக்களிக்கும் நாட்டில் உன் வாழ்நாள்கள் நீடிக்கும் படி உன் தந்தையையும் தாயையும் மதித்து நட (விடுதலைப் பயணம் 20:12)
5. கொலை செய்யாதே (விடுதலைப் பயணம் 20:13)
6. விபச்சாரம் செய்யாதே (விடுதலைப் பயணம் 20:14)
7. களவு செய்யாதே (விடுதலைப் பயணம் 20:15)
8. பொய்ச்சான்று சொல்லாதே (விடுதலைப் பயணம் 20:16)
9. பிறர் மனைவியை விரும்பாதே (விடுதலைப் பயணம் 20:17)
10. பிறருக்குரியது எதையுமே கவர்ந்திட விரும்பாதே(விடுதலைப் பயணம் 20:17)

### இடைவெளி நிரப்புக

1. “ ஏழையின் உள்ளத்தோர் பேறுபேற்றோர். ஏனெனில் …… அவர்களுக்கு உரியது” - விண்ணரசு (மத்தேயு 5:3)
2. “ ……… பேறுபெற்றறோர். ஏனெனில் அவர்கள் ஆறுதல் பெறுவர்” - துயருறுவோர் (மத்தேயு 5:4)
3. “ கனிவுடையோர் ………. ஏனெனில் அவர்கள் நாட்டை உரிமைச் சொத்தாக்கி கொள்வர்” - பேறுபெற்றோர் (மத்தேயு 5: 5)
4. “நீதி நிலை நாட்டும் வேண்கை கொண்டோர் பேறுபெற்றோர் ஏனெனில் அவர்கள் … பெறுவர்.” -நிறைவு (மத்தேயு 5: 6)
5. “ ……… பேறுபெற்றோர். ஏனெனில் அவர்கள் இரக்கம் பெறுவர்” - இரக்கமுடையோர்(மத்தேயு 5: 7)
6. “ தூய்மையான ………. பேறுபெற்றோர். ஏனெனில் அவர்கள் கடவுளின் மக்கள் எனப்படுவர்” - உள்ளத்தோர் (மத்தேயு 5: 7)
7. “ அமைதியை ஏற்படுத்துவோர் பேறுபெற்றோர். ஏனெனில் அவர்கள் ……….மக்கள் என அழைக்கப்படுவர்” - கடவுளின் (மத்தேயு 5:8)

## பேச்சுப்போட்டி

## உறவு வாழ்விற்கு அருளடையாளங்கள்

நாம் பிறரோடு உறவு கொண்டு வாழ்கிறோம். நாம் கொண்டுள்ள உறவைச் சொற்கள், செயல்கள், பிறருக்கு அளிக்கும் பொருள்கள் போன்ற அடையாளங்கள் வழியாக வெளிப்படுத்துகிறோம்.

இத்தகைய அடையாளங்கள் இன்றி உறவு வாழ்வு இல்லை. கை குலுக்குதல், கை கோர்த்துச் செல்லல், முத்தம் கொடுத்தல், பரிசுப்பொருள் வழங்குதல், சேர்ந்து உண்ணுதல் நம்மிடம் இருப்பதைப் பிறருடன் பகிர்ந்து கொள்ளல் போன்றவை உறவை வளர்க்கும் அடையாளங்களுள் சில. நாம் பிறரோடு உறவு கொள்ள அடையாளங்களைப் பயன்படுத்துவது போல, கடவுள் நம்மோடு உறவு கொள்ளச் சில அடையாளங்களைப் பயன்படுத்துகிறார். வானவில், மன்னா, நெருப்புத்தூண், மேகம், உடன்படிக்கை பேழை, வெண்கலப் பாம்பு போன்றவை பழைய ஏற்பாட்டில் நாம் காணம் அடையாளங்களுள் சில. இயேசு நோய்களை போக்கியது; பேய்களை ஓட்டியது, அப்பங்களை பலுகச் செய்தது, இறந்தோரை உயிர்ப்பித்தது போன்றவை தந்தையின் அன்பை வெளிப்படுத்தும் அடையாளங்களே. மனிதரோடு உறவு கொண்ட இறைவன் அந்த உறவில் என்றும் நிலைத்திருக்க விரும்பினார். எனவே அருளடையாளங்களை ஏற்படுத்தினார். இந்த அருளடையாளங்கள் நாம் இறைவனோடு அருள் நிலையில் தொடர்ந்து வாழவும் வளரவும் பிறரோடு அன்புறவு கொள்ளவும் வழிவகுக்கின்றன. அருளடையாளங்களை இயேசு ஒரு மாபெரும் கொடையாக திரு அவைக்கு அளித்தார். திரு அவை இவற்றை தொடர்ந்து கொண்டாடுகிறது.

## பாடல் போட்டி (மனப்பாடம் செய்து பாட வேண்டும்.)

எனக்காக நீ தந்த வாழ்வை ஏந்தி
உனக்காக நான் தந்தேன் இறைவா
இதை ஏற்று உனதாக மாற்றி அருட்பலியில்
எனை நீ இணைப்பாய் இறைவா

அணையாத தீபம் உன் திரு இதயம்
ஏற்றிட வந்தேன் என் சிறு அகலை -2
உலகின் ஒளியாய் இருப்பவனே
உன் கோவில் நானாக மாற்றிடுவாய் -2
ஏற்றிடுவாய் மாற்றிடுவாய்
இறைஞ்சுகின்றேன் இரங்கிடுவாய் -2

ஏங்கும் விழியில் தேங்கிய நீரும்
அலை ஓயா மனமும் ஏந்தி வந்தேன் -2
எதையும் தாங்கும் இறையவனே
உன்னோடு ஒன்றாக ஏற்றிடுவாய் -2
ஏற்றிடுவாய் மாற்றிடுவாய்
இறைஞ்சுகின்றேன் இரங்கிடுவாய் -2

## ஓவியப் போட்டிக்கான தலைப்பு

**கிறிஸ்து அரசர்**